PR/2019/5/T

From
the People of Japan

# ஜப்பான் தூதரகம்

இல. **20,** ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனாநாயக்க மாவத்த, கொழும்பு **7,** இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3 தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

**ஊடக அறிக்கை**

**ஜனவரி** 25,2019

## பார்வைக் குறைபாடுடையோரிற்கு பிரெய்ல் வசதிகளை வழங்க ஜப்பான் நிதியுதவி

பார்வைக் குறைபாடுடையோர், தகவல் அணுகுதலை உறுதிசெய்யும் திட்டத்திற்கு, அடித்தள மக்களை பாதுகாக்கும் திட்டத்தினூடாக 98,191 அமெரிக்க டொலரை (அண்ணளவாக 16 மில்லியன் ரூபா) ஜப்பான் அரசு வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் ஜனவரி 24ஆம் திகதி, ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா மற்றும் இலங்கை பார்வைக் குறைபாடுடையோர் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் சுகத் வசந்த டி சில்வா ஆகியோரிற்கிடையே தூதுவர் இல்லத்தில் கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பானிய நிறுவனமொன்றால் தயாரித்து வழங்கப்படும் பிரெய்ல் அச்சிடும் இயந்திரங்களையும் பிரெய்ல் காட்சியுருக்களையும் பயன்படுத்தி பார்வைக் குறைபாடுடையோர் தகவல்களை எளிதாக பெற்றுக்கொள்வதனை இந்த திட்டம் நோக்காகக் கொண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் தேசிய வீடமைப்பு மற்றும் சனத்தொகை மதிப்பீடிற்கு அமைவாக இலங்கையில் ஏறத்தாழ ஒரு மில்லியன் பார்வைக் குறைபாடுடையோர் வாழ்கின்றனர். இம்மானிய உதவியைப் பெறும் இலங்கை பார்வைக் குறைபாடுடையோர் பட்டதாரிகள் சங்கம்இ மாதாந்த சஞ்சிகைகளை பிரெய்ல் முறையில் அச்சிட்டு நாடுமுழுவதும் உள்ள நூலகங்களிற்கு விநியோகம் செய்யவுள்ளது.. பிரெய்ல் காட்சி இயந்திரங்கள் சங்கத்தின் மொறட்டுவ தலைமையகத்தில் பொருத்தப்படுவதால் பொதுமக்கள், இதன் உள்ளீடுகளை கணினிகளில் வாசித்தறியலாம்.

இத் திட்ட கைச்சாத்திடலின் போது திரு. டி. சில்வா உரையாற்றுகையில் ‘அனேகமான பார்வைக் குறைபாடுடையோர் தகவல்களை அணுக முடியாதுள்ளனர்

இலங்கை, ஜக்கிய நாடுகள் சபையின் விசேடதேவையுடையோரிற்கான உரிமைகள் உடன்பாட்டினை 2016 பெப்ரவரி 8ஆம் திகதி கைச்சாத்திட்டது. இவ் உடன்படிக்கையில் வெளிப்படுத்தல் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவலை எளிதில் பெற்றுக்கொள்ளும் சுதந்திரம் என்பன பார்வைக்குறைபாடுடையோர் புரிந்து கொள்ளும் முறையிலும் தகவலை பெறுவதற்கான உரிமையையும் வலியுறுத்துகின்றது. இலங்கையிலுள்ள பார்வைக்குறைபாடுடையோர் தகவலறிவதற்கான உரிமை பிரெய்ல் மூலமாக கிடைக்கப் பெறுவதை உறுதிசெய்தலை இத் திட்டம் நோக்காகக் கொண்டது. இருப்பினும், இப் பிரெய்ல் முறையானது 1912 ஆம் ஆண்டு நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டதோடு இப் பிரெய்ல் முறையில் சில நூல்களே காணப்படுகின்றது. எனினும், பிரெய்ல் பற்றிய தற்போதைய தகவல் எதுவுமில்லை. மேலும், இலங்கையிலுள்ள பார்வைக்குறைபாடுடையோர் சமூகத்தின் சார்பில் நிதி வழங்கிய ஜப்பானிய அரசாங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்’ என தெரிவித்தார்.

***********************************************************

*மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து ஜப்பானியத்தூதரகத்தின் அபிவிருத்தி கூட்டுறவுப்பிரிவைத் தொடர்புகொள்ளவும்.*

தொலைபேசி: 011-2693831 ext 225

மின்னஞ்சல்: cultujpn@co.mofa.go.jp